இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic Weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 Fax: 021 - 222 9041, ISSN 1391-7633

மலர்: 141 | இதழ் : 04 | திகதி: 26.02.2017 | விலை : 20.00

# பூர்வீக நிலங்களுக்கான மக்களின் போராட்டத்திற்கு மதிப்பளியுங்கள்

## கேப்பாபுலவு போராட்டம் பற்றி நீதி சமாதான ஆணைக்குழு வேண்டுகோள்

கடந்த ஏழு ஆண்டுகளாக பாதுகாப்புப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமக்குச் சொந்தமான காணிகளை மீளப்பெறுவதற்காக கேப்பாபுலவு மக்கள் தொடர்ச்சியாக நடாத்திவரும் போராட்டத்தற்கு ஆதரவாக யாழ். மறைவாட்ட நீதி சமாதான ஆணைக் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ். வி.பி.மங்களராஜா அடிகள் தலைமையிலான குருக்கள் அடங்கிய குழு ஒன்று அணமையில் போராட்டம் நடைபெறும் இடத்திற்கு விஜயம் செய்து மக்களின் போராட்டத்தில் இணைந்து அவர்களின் பிரச்சனைகளைக் கேட்டறிந்தது.

படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள 49 வீடுகளை உள்ளடக்கிய தமது சொந்தக் காணிகளைத் திருப்பித்தருமாறு கேட்டு மக்கள் காலவரையறையற்ற உணவுத்தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.



தமது காணிகளை மீளப்பெறுத் தருமாறு அரசியல்வாதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் போன்றோரூடாக அவர்கள் விடுத்த வேண்டுகோள்கள் எதுவும் பலனளிக்காத நிலையிலேயே மக்கள் தாமாக கடந்த மூன்று வாரங்களுக்கு மேலாக இந்த அமைதிப் போராட்டத்தை நடாத்திவருகிறார்கள்.

இவைதவிர இலங்கையின் தென்பகுதியிலிருந்து உள்ளடங்கலாக சமய நிறுவனங்கள், பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்கள், அரசியல் பிரமுகர்கள், புத்தபிக்குகள் போன்றோரும் இம்மக்களின் நியாயமான கோரிக்கையை ஆதரித்து அவர்களின் காணிகளை விடுவிக்குமாறு அரசாங்கத்தைக் கோரி வருகின்றபோதும் அரசாங்கம் இவ்விடயத்தில் பாராமுகமாவே இருந்து வருகின்றது.

(தொடர்ச்சி 06 ம் பக்கம்)

## ஆயர் பேரவைக்கு புதிய தலைவர்



இலங்கை கத்தோலிக்க ஆயர்பேரவையின்புதிய தலைவராக பதுளை மறைமாவட்ட ஆயர் மேதகு ஜூலியன் வின்ஸ்டன் பர்னாந்து SSS ஆண்டகை தலைவராக பதவியேற்றுள்ளார்.

கண்டியில் நடைபெற்ற ஆயர் பேரவையின் கூட்டத்தில் இந்நியமனம் வழங்கப்பட்டது. ஆயர் அவர்கள் 1997 ஆம் ஆண்டு ஆனி மாதம் 04 ஆம் திகதி ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார்.

நற்கருணை நாதர் சபையில் முதலாவது ஆசிய ஆயர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. தேசிய மறைபரப்புப் பணியின் நிறைவேற்று செயலாளராக 1993ஆம் ஆண்டு - 1995 ஆம் ஆண்டு வரை பணிபுரிந்த ஆண்டகை அவர்கள், ஆயராக பொறுப்பேற்ற பின் தேசிய பொதுநிலையினர் ஆணைக் குழுவின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். ஆயரின் புதிய பணியில் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

## அருட்பணி சரத்ஜீவன் "தரிசனம்" முன்பள்ளி திறப்புவிழா



புங்குடுதீவு புனித சவேரியார் ஆலயத்தில் அமைக்கப்பட்ட சறத்ஜீவன் தரிசனம் முன்பள்ளி, மேன்மை தங்கிய ஆயர் யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் 11-02-2017 அன்று ஆசீர்வதித்து திறந்து வைக்கப்பட்டது.

அருட்தந்தை இயூஜின்பிரான்சிஸ்.கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தின் இயக்குனர் அவர்கள் இந் நிகழ்விற்கு தலைமை தாங்கினார். திரு. அஜித் ஜோண்பிள்ளை இயக்குனர் சண் பீம் பவுண்டேசன் அவர்கள் ஏழு மில்லியனுக்கும் மேற்பட்ட நிதி உதவிகளை இக்கட்டட நிர்மாணத்திற்கு வழங்கியுள்ளார்.

முன்பள்ளி சிறுவர்களுக்கான சத்துணவு, பாடசாலை உபகரணங்கள், பாடசாலை சீருடைகள் என்பனவும் சண் பீம் பவுண்டேசன் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள் ளன. கட்டட நிர்மாணப் பணிகளை திரு.சுகந்தன் மற்றும் அவரின் பணியாளர்கள் சிறப்புற அமைத்துள்ளார்கள்.

## பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் ஆற்றும் ஊடகவியற் பணி மகத்தானது

### முன்னாள் துணைவேந்தர் பேரோசிரியர் பாலசுந்தரம்பிள்ளை





இந்தியாவின் பெயர்போன பல்கலைக்கழகங்களில் ஒன்றான கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமான பிசப் சவுந்தரம்மீடியா சென்ரறில் 2012 - 2016 கல்வியாண்டுகளில் ஊடகக்கற்கை இளங்கலைமாணி மற்றும் ஊடகக்கற்கை முதுகலைமாணி கற்கை நெறியினை நிறைவு செய்த 11 மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா 22.02.2017 அன்று இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வின் பிரதம விருந்தினராக மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக ஊடக கற்கைகள் இணைப்பாளர் கலாநிதி எஸ்.ரகுராம் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேரோசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் கலாநிதி யோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் பத்திரிசியார் கல்லூரி லண்டன் பழைய மாணவர் சங்க தலைவரும் லண்டன் கொட்டேல் மரியா உரிமையாளருமான திரு.திருமதி அருளானந்தம் ஜெயராசா யசிந்தா புஸ்பம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(தொடர்ச்சி 06 ம் பக்கம்)

## உள ஆற்றுப்படுத்தல் டிப்ளோமா பட்டமளிப்பு விழா

யாழ். மறை மாவட்ட குடும்ப வளத்துணை நிலையமாகிய அகவொளி நிறுவனத்தில் 12-02-2017 அன்று உள ஆற்றுப்படுத்தல் டிப்ளோமா பாடநெறியை நிறைவு செய்த இருவருட மாணவர்கள் 26 பேருக்குப் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இக்கல்வி நிறுவனத்தின் வேந்தரும் யாழ் ஆயருமான பேரருள்திரு யஸ்ரின் பி.ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் பிரதம விருந்தினராகவும் புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருமட அதிபர் அருள்தந்தை நீ.யே.கிருபாகரன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் அருள்தந்தையர்கள், அருட்சகோதரிகள், விரிவுரையாளர்கள், மாணவர்களின் பெற்றோர் மற்றும் நண்பர்கள் கலந்துகொண்டனர்.



ஆயர் தனது உரையில் "உயர்கல்வி நிறுவனங்கள் தொழில்வாய்ப்பைப் பெற்றுத்தர வல்ல பாடநெறிகளைக் கற்பிப்பதே காலத்தின் தேவை.

(தொடர்ச்சி 06ம் பக்கம்)

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா:127:1)**

# எமது எண்ணம்

## கேப்பாப்புலவு போராட்டமும் நீதிசமாதான ஆணைக்குழுவின் ஆதரவும்

கத்தோலிக்க திருச்சபையின் தமிழ்க் குருக்கள் தமிழர்களின் அரசியல் உரிமை கோரிக்கைகளுக்கு எப்போதுமே மதிப்பளித்து வருகின்றனர். அதன் அடிப்படையில் கடந்த ஏழு ஆண்டுகளாக பாதுகாப்புப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள, தமக்குச் சொந்தமான காணிகளை மீளப்பெறுவதற்காக கேப்பாபுலவு மக்கள் தொடர்ச்சியாக நடத்திவரும் போராட்டத்திற்கு யாழ். மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.வி.பி.மங்களராஜா அடிகள் ஆதரவு வெளியிட்டுள்ளார். அடிகளார் தலைமையிலான குருக்கள் அடங்கிய குழு ஒன்று போராட்டம் நடைபெறும் இடத்திற்கு விஜயம் செய்துமக்களின் போராட்டத்தில் இணைந்து அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்துள்ளது.

படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள 49 வீடுகளை உள்ளடக்கிய தமது சொந்தக் காணிகளைத் திருப்பித்தருமாறு கேட்டு மக்கள்காலவரையறையற்ற உணவுத்தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில் அருட்தந்தை எஸ்.வி.பி. மங்களராஜா அடிகளார் தலைமையிலான குழுவினர் அங்கு சென்றுவந்தமை போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு சற்று நிம்மதியையும் நம்பிக்கையையும் கொடுத்துள்ளது. வடக்குகிழக்கில் ஏராளமான காணிகள் படையினரால் அபகரிக்கப்பட்டிருக்கும் நிலையில் கேப்பாப்புலவு மக்களின் போராட்டம் அனைத்து காணிகளையும் அரசாங்கம் விடுவிக்கவேண்டும் என்ற செய்தியை கொடுத்துள்ளது.

யுத்தத்தின் பக்கவிளைவுகளுக்குக்கூட தீர்வுகாண விரும்பாத இந்த அரசாங்கம் நல்லிணக்கம் பற்றிப் பேசுவதன் அர்த்தம் என்ன என்ற கேள்வி எல்லோரிடமும் எழுகின்றது. 30 ஆண்டுகால யுத்தத்தின் பக்கவிளைவுகளில் மக்களின் இடப்பெயர்வு முக்கியமானது. தங்களின் சொந்த வீடுகள், விவசாய நிலங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தமது பூர்வீகநிலங்களில் வாழவேண்டும் என விரும்புவதில் என்ன தவறு உள்ளது? யுத்தம் முடிவடைந்து விட்டது என மார் தட்டும் அரசாங்கம் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் மக்களை நிம்மதியாக வாழ ஏன் சம்மதிக்கவில்லை? அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாடு தமிழர்களின் கடந்த 60 ஆண்டு கால அரசியல் போராட்டத்தை நியயப்படுத்துகின்றது என்பது நிதர்சனம். ஆனால் சர்வதேச சமூகத்தின் தொடர்ச்சியான அழுத்தங்களுக்கு முகம்கொடுக்க கால அவகாசம் கோருவது போன்று, இதன் பின்னணி என்ன என்ற சந்தேகங்கள் மக்கள் மத்தியில் அதிகரித்துள்ளன. அதன் வெளிப்பாடுகள் தான் முல்லைத்தீவு கேப்பாபுலவு மக்களின் போராட்டம் என்று கூட கூறலாம். கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் தமிழர்களுக்குச் சொந்தமான காணிகளில் மூன்றில் ஒரு பங்கு படையினரால் அபகரிக்கப்பட்டுள்ளதாக அங்குள்ள அரச அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

1983 ஆம் ஆண்டுமுதல் இந்த எண்ணக்கரு உருவாகி தற்போது நம்பிக்கை தரக்கூடிய நல்லாட்சி அரசாங்கத்திலும் அது தொடருவதனால்தான் மீள்குடியேற்றம் என்பதில் மக்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இந்த விடயத்தில் கத்தோலிக்க திருச்சபை மக்களின் பக்கமே நிற்கும் என்பதற்கு எடுத்துக்காட்டாக அருட்தந்தை மங்களராஜா அடிகளார் போராட்டத்தை ஆதரித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டார் என்று கூறலாம். ஆகவே இன நல்லிணக்கம் பற்றிப் பேசுகின்ற அரசாங்கம் அதுவும் வடக்கு கிழக்கு மக்களின் ஏகோபித்த வாக்குகளில் நல்லாட்சி அரசாங்கம் அமைத்த அரச தலைவர் இதில் உடன் கவனம் செலுத்தவேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

மீள் குடியேற்றம் இடம்பெற்று வருகின்றது. மக்களின் காணிகள் படிப்படியாக கையளிக்கப்பட்டு வருகின்றன என்று அரசாங்கம் கூறலாம். அதை மறுக்கமுடியாது. ஆனால் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் முக்கியமான பாரம்பரிய காணிகள் இன்னமும் படையினர் வசம் உள்ளன. அத்துடன் அந்த காணிகளில் படைமுகாம் அமைக்கப்பட்டு படையினருக்குத் தேவையான கட்டடங்களும் அமைக்கப்படுகின்றன. ஆகவே தான் அரசியல் நோக்கம் இன்றிமக்களின் காணிகளை விடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். அப்போது தான் நல்லாட்சி மீதான நம்பிக்கை கட்டியெழுப்பப்படும்.

**அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்**

# புலம்பெயர்ந்தோர் மீது திருத்தந்தையின் அக்கறை

குடிபெயர்ந்தோர், மற்றும், புலம் பெயர்ந்தோர் ஆகியோரைக் குறித்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கொண்டிருக்கும் அக்கறையை இவ்வுலகம் தெளிவாகப் புரிந்துகொண்டுள்ளது என்று, திருப்பீட உயர் அதிகாரி ஒருவர், ஒரு பன்னாட்டுகருத்தரங்கில்கூறினார்.

அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதாரத்தில், குடிபெயர்தல்' என்ற தலைப்பில், கர்தினால் பரோலின் அவர்கள் வழங்கிய உரையில், ஒருங்கிணைந்த மனிதமுன்னேற்ற திருப்பீடஅவையில் ஓர் அங்கமான புலம்பெயர்ந்தோர் துறையை, திருத்தந்தைபிரான்சிஸ் அவர்கள் தன் நேரடி பார்வையில் இணைத்துள்ளார். அவர் இப்பிரச்சினையில் காட்டும் அக்கறையை மேலும் இது உறுதிப்படுத்துகிறதுஎன்று கூறினார்.

2016ம் ஆண்டு,வெளிவந்த Oxfam அறிக்கையின்படி, உலகின் 8 செல்வந்தர்கள் வைத்திருக்கும் சொத்து, 306 கோடி மக்களின் சொத்துக்கு இணையானது என்பதை, தன் உரையில் சுட்டிக்காட்டிய கர்தினால்பரோலின் அவர்கள், உலகெங்கும் வளர்ந்துவரும் வறுமை, குடிபெயர்தலுக்கும், புலம்பெயர்தலுக்கும் ஒரு முக்கிய காரணம் இது என்று எடுத்துரைத்தார்.

உலகின் பலபகுதிகளில் நிலவும் மோதல்களை, ஆயுத உற்பத்தியாளர்களும், வர்த்தகர்களும், தங்கள் வர்த்தக நோக்கத்திற்காகப் பயன்படுத்துவது, வேதனைதரும் சுயநல போக்கு என்பதை, கர்தினால் பரோலின் அவர்கள் தன் உரையில் வலியுறுத்தினார்.

# “அகில உலக அமைதி மற்றும் பாதுகாப்பு: ஐரோப்பாவில் மோதல்கள்”

உலகின் பலபகுதிகளில் நிகழ்ந்துவரும் போர்களில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து மக்களோடும் திருப்பீடம்தன்ஒருமைப்பாட்டையும்,அருகாமையையும் உறுதி செய்யவிழைகிறது என்று திருப்பீட உயர் அதிகாரி ஒருவர், ஓர் உலக அரங்கில் உரையாற்றுகையில் கூறினார்.

நியூயார்க் நகரில் இயங்கிவரும் ஐ.நா. தலைமைச் செயலகத்தின் கூட்டங்களில், திருப்பீடத்தின் சார்பில் பங்கேற்கும் பேராயர் பெர்னார் தித்தோ அவுசா அவர்கள், ஐ.நா. பாதுகாப்பு அவை, இச்செவ்வாயன்று மேற்கொண்ட ஒரு கூட்டத்தில் இவ்வாறு உரையாற்றினார்.

“அகில உலக அமைதி மற்றும் பாதுகாப்பு: ஐரோப்பாவில் மோதல்கள்” என்ற தலைப்பில் நடைபெற்றஇக்கூட்டத்தில்பேசியபேராயர்அவுசா அவர்கள், அகில உலக அமைதி, மற்றும் பாதுகாப்பு முயற்சிகள், மனித உயிர்களைக் காப்பதற்கும், துயரங்களைத் துடைப்பதற்கும் முன்னுரிமைதரவேண்டும் என்றுதன் உரையில் வலியுறுத்தினார்.

2014ம் ஆண்டுமுதல் நிகழ்ந்துவரும் உக்ரைன் மோதல்களை, தன் உரையில் குறிப்பிட்டுப் பேசியபேராயர் அவுசா அவர்கள், அனைத்து தரப்பினரும் உண்மையானமுயற்சிகளை மேற்கொள்வது மட்டுமே, மோதல்களைத் தீர்ப்பதற்கு ஒரே வழி என்று சுட்டிக்காட்டினார்.

# குடிபெயர்ந்தோருக்கு புகலிடம் தரவேண்டிய கத்தோலிக்க பங்குகள்

அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து வெளியேற்றப்படும் ஆபத்திற்கு உள்ளாகியிருக்கும் குடிபெயர்ந்தோருக்கு புகலிடம் தரும் சரணாலயங்களாக கத்தோலிக்க பங்குகளும், ஏனைய குழுமங்களும் செயற்பட வேண்டும் என்று, கலிபோர்னியாவில் நடைபெற்ற ஒரு தேசிய கூட்டத்தில் விண்ணப்பம் எழுப்பப்பட்டது.

தேசியசமூகநல இயக்கங்களின் நான்குநாள் மாநாடு, கலிபோர்னியாவின் மொதெஸ்தோ எனுமிடத்தில், இஞ்ஞாயிறன்று நிறைவுற்ற வேளையில், வெளியிடப்பட்ட தீர்மான அறிக்கையில், படைக்கப்பட்ட ஒவ்வொரு மனிதரும், இறைவனின் கொடை என்பதால், ஒவ்வொருவரும் புனிதமாகக் கருதப்படவேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

தனிமனித மாண்பு மற்றும் படைப்பு அனைத்தின் மீதும் காட்டப்படவேண்டிய மரியாதை ஆகிய விழுமியங்களுக்கு எதிராக, அமெரிக்க ஐக்கிய நாட்டை ஆட்சிசெய்யும் முதலாளித்துவம் செயற்படுகிறது என்பதை, திருத்தந்தையின் செய்திகள் வலியுறுத்துகின்றன என்று இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

குடிபெயர்ந்தோருக்கு ஆபத்து விளைவிக்கும் சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ள சூழலில், இந்த ஆபத்திலிருந்து அப்பாவி மக்களைக் காக்கும் கடமை, கத்தோலிக்க சமுதாயத்திற்கு அதிகம் உள்ளது என்று இவ்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

மேலும், குடிபெயர்ந்தோர் பிரச்சினை குறித்து, கத்தோலிக்க ஆயர்கள், மக்களுக்கு, தெளிவான கருத்துக்களையும், செயல்முறைதிட்டங்களையும், ஒரு சுற்றுமடல் வழியே வழங்கவேண்டும் என்று,தேசிய சமூகநல இயக்கங்களின் மாநாட்டு அறிக்கை விண்ணப்பிக்கிறது.

# குடியேற்றத்தார் குறித்த அரசாணைகள், குடும்பங்களைச் சிதைக்கும்

அமெரிக்க ஐக்கியநாட்டு அரசுத் தலைவர் டொனால் டுடிரம்ப் அவர்கள், குடியேற்றத்தார் குறித்து வெளியிட்டுள்ள அரசாணைகள், பல்லாயிரம் குடும்பங்களில், பாதுகாப்பின்மை, எதிர்காலம் பற்றிய உறுதியற்ற நிலைபோன்ற துன்பங்களை விளைவித்துள்ளன என்று, மெக்சிகோ உயர் மறைமாவட்டம் கூறியுள்ளது.

தகுந்த ஆவணங்கள் இன்றி, அமெரிக்க ஐக்கிய நாட்டில் வாழ்வோர், சிறுகுற்றங்களின் அடிப்படையிலும் நாட்டைவிட்டு வெளியேற்றப்படுவர் என்று அரசுத் தலைவர் அறிவித்திருப்பது, பல்லாயிரம் குடும்பங்களின் பெற்றோர்களை நாட்டை விட்டு வெளியேற்றி, அவர்களின் குழந்தைகளை பாதுகாப்பின்றி விட்டு விடும் நிலையை உருவாக்கியுள்ளது என்று, மெக்சிகோ உயர் மறைமாவட்டம் வெளியிடும் “Desde la Fe” என்ற இதழில் கூறப்பட்டுள்ளது.

இத்தகைய சூழலில், குடிபெயர்ந்தோர் குடும்பங்களுக்குத் தேவையான பாதுகாப்பு, சட்ட ஆலோசனை மற்றும் நிதி உதவிகள் அனைத்தையும் செய்வதற்கு, அமெரிக்க, மெக்சிகோ எல்லையில் அமைந்துள்ள இருநாட்டு ஆயர்களின் இணைந்த அறிக்கையொன்று அழைப்பு விடுக்கிறதென்று பீதேஸ் செய்திக்குறிப்பு கூறுகிறது.

தற்போது நடைபெற்றுவரும் கடுமையானஆட்சியின் பின்னணியில், மக்களுக்கு சமுதாய, அரசியல், சட்ட வழிகளில் அனைத்து உதவிகளையும் வழங்குவது.



# வாக்குவாதங்கள்

இன்றைய குடும்பங்கள் விரைவாகச் சிதைந்து வருகின்றன. குடும்பச் சிக்கல்களைச் சற்று ஆய்வுசெய்து பார்த்தால், கணவன் - மனைவியரிடையே அல்லது பெற்றோர் - பிள்ளைகளிடையே நிகழும் வாக்குவாதங்களே உறவுச் சிதைவுக்கு முதல் காரணம் என்பதை உணரலாம். நம் அன்றாடப் பணிகளின் நடுவே சிலவேளைகளில் நாம் ஒருவரோடொருவர் வாக்குவாதங்களில் ஈடுபடுகிறோம். சில விவாதங்கள் மனத்துயரிலும், உறவுச் சிதைவிலும் கொண்டுபோய்ச் சேர்க்கின்றன.

கருத்துக்களை வெளிப்படுத்தும் போதும், விவாதங்களில் கலந்துகொள்ளும்போதும் ஒருவரோடு ஒருவர் சொற்போரில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததே. ஆனால், அது உறவு முறிவில் முடிந்துவிடக்கூடாது. எனவே, சில தெளிவுகளை மனதில் கொள்ளுதல் நலம்.

யாரெல்லாம் நலமான, திறந்த மனதுடன் இருக்கின்றனரோஅவர்களுடன் மனந்திறந்து உரையாடலாம். மாற்றுக் கருத்துக்களையும் மென்மையாக ஆனால் வலிமையாக எடுத்துரைக்கலாம். நல்ல விவாதங்கள் அறிவை, புரிந்துணர்வை விசாலப்படுத்துகின்றன. ஆனால் அதற்கு உளமுதிர்ச்சியும், பரிவுணர்வும் தேவை.

சொற்போரில் கருத்துக்கள் மோதலாம். ஆனால் ஆட்கள் மோதக்கூடாது. குறிப்பாக உணர்வுகளைக் கலந்து விவாதிக்கும் போது, கருத்துத் தாக்குதல் ஆட்மீதான தாக்குதலாக மாறி விடக்கூடாது,

எனவே, அதிக உணர்ச்சிவசப்பட்டு வாதங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும். குறிப்பாக, குடும்பங்களில் கணவன் - மனைவி, பெற்றோர் - பிள்ளைகள் வாக்குவாதங்களில் ஈடுபடும்போது அதிக கவனம் தேவைப்படுகிறது.

ஒரு வாக்கு வாதம் முடிவேயில்லாமல் தொடர்ந்து கொண்டிருந்தால், "உங்களுக்கு அது சரியாகப் படலாம். ஆனால் எனக்கு அதில் உடன்பாடில்லை" போன்ற நல்ல சொற்களைப் பயன்படுத்தி ஒரு வாதத்தை முடித்துக்கொள்ளலாம். இதைத்தான் உடன்படாதிருக்க உடன்படுதல் (agree to disagree) என்று அழைக்கிறார்கள்.

கருத்தொற்றுமையே இல்லாத இருவர் விவாதத்தில் ஈடுபடுவது மடமையானது. ஒருவர் மற்றவரின் கருத்தை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள மாட்டார் என்று தெரிந்த பின்பும், ஏன் பயனின்றி விவாதிக்க வேண்டும்? அமைதி காப்பதே நன்று.

சிலர் மறுப்புச் சொல்ல வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக வீணாக விவாதித்துக்கொண்டிருப்பார்கள். இவர்களிடம் வாதம் செய்வது பயனற்றது. இங்கும் அமைதி உதவும்.

சில சமயம் "நீங்கள் சொல்வதும் ( ஒரு வகையில்) சரிதான்" என்று சொல்லிவிட்டால், வாக்குவாதம் அத்துடன் முடிந்துவிடும். அதேவேளையில் நம்முடைய கருத்தையும் விட்டுக்கொடுக்காத நிலை ஏற்படும் உறவுக்காகக் கருத்துக்களையும் சிலவேளைகளில் விட்டுக்கொடுக்கலாம். அதில் தவறில்லையே!

சில வேளைகளில் "நீங்கள் சொல்வது புரியவில்லை. கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள்" என்று கேட்கலாம். அது நமது ஆர்வத்தையும், திறந்த மனதையும் காட்டும். மாற்றுக் கருத்துடையவர்களையும் நாம் மதிக்கிறோம் என்பதன் அடையாளமாக அமையும்

> விவாதங்களை அறிவுத் தளத்திலிருந்து உறவுத் தளத்திற்குக் கொண்டுவராமல் காத்துக்கொண்டால், உறவுகளைப் பாதுகாத்துக் கொள்ளலாம்:

வாக்குவாதத்தின்போதுகோபப்படுவதோ, குரலை உயர்த்துவதோ தவிர்க்கப்பட வேண்டும். சீனப் பழமொழி ஒன்று இப்படிச் சொல்கிறது "இரண்டு பேர் சூடாக விவாதம் செய்து கொண்டிருக்கும்போது யார் கோபப்படுகிறார்களோ அவர்கள் வாதத்தில் தோல்வி அடைகிறார்கள்" ஆம், கோபம் இயலாமையை வெளிப்படுத்துகிறது.

பிடிக்காத கருத்தாக இருந்தாலும், சிறிது நேரம் அந்தக் கருத்துக்கும் செவிமடுப்பது உறவை வளர்ப்பதாகவும், நம் பெருந்தன்மையைக் காட்டுவதாகவும் அமையும். "எனக்கு இப்படித் தோன்றுகிறது. ஒருவேளை நான் தவறாக இருக்கலாம்" போன்ற சொல்லாடல்களைப் பயன்படுத்துவது விவாதத்தை உறவின் பாதையிலேயே வைத்திருக்கும்.

ஒவ்வொருமுறையும் வாக்குவாதம் செய்யும்போது, "இவர் என் நண்பர், எனக்கு வேண்டியவர்" என்று நினைத்துக்கொண்டால், கடின சொற்களைப் பயன்படுத்த மாட்டோம். இதற்கு (self awareness என்னும்) தன் உணர்வுத்திறன் தேவை. இத்திறனை அடிக்கடி பயன்படுத்தி ஒரு பழக்கமாக்கிக்கொள்வது நல்லது.

விவாதத்தின் இடையில் புன்னகையுங்கள். அந்தப் புன்னகை விவாதத்தை உறவின் தளத்திலேயே வைத்திருக்க உதவும்.

அடுத்தமுறை, யாருடனாவது விவாதிக்க நேர்ந்தால் இவற்றை மனதில் கொள்ளுங்கள். உறவின் முறிவுக்கு வாய்ப்பே இல்லை.

இறுதியாக, விவாதங்கள் பற்றித் திருவிவிலியம் கூறும் இந்த அறிவுரைகளையும் மனதில் வைப்போம்.

- "திருவுளச்சீட்டு விவாதத்தை முடிவுறச் செய்யும் வாதிடும் வலியோரின் வாழக்கைத் தீர்க்கும்" (நீமொ 18:18)
- "விவாதத்தில் ஈடுபடாதிருத்தல் மனிதருக்கு அழகு. ஏனெனில், மூடராயிருக்கும் எவரும் விவாதத்தை விரும்புகின்றனர்" (நீமொ 20:3)
- "மடமைத்தனமான அறிவற்ற விவாதங்கள் சண்டைகளைத் தோற்றுவிக்கும் என அறிந்து அவற்றை விட்டுவிடு" (2 தீமொ 2:23)
- "மடமைத்தனமான விவாதங்கள், மூதாதையர் பட்டியல்கள் பற்றி ஆய்வுகள், போட்டி மனப்பான்மை, திருச்சட்டத்தைப் பற்றிய சண்டைகள் ஆகியவற்றை விலக்கு. இவை பயனற்றவை, வீணானவை" (தீத் 2-9)

# விமர்சனங்கள்



அன்றாடவாழ்வில் நாம் பலதரப்பட்ட விமர்சனங்களை எதிர்கொள்கிறோம் சில விமர்சனங்கள்சிரிப்பைவரவழைக்கின்றன சில விமர்சனங்கள் மனதில்காயத்தைஉண்டாக்குகின்றன சிலவிமர்சனங்கள் கோபத்தையும் விரோதத்தையும் வளர்க்கின்றன விமர்சனங்களை மூன்று வகை களாகப் பிரிக்கலாம்.

முதல் வகை காற்றுவாக்கிலான விமர்சனங்கள். இவை பெரும்பாலும் விமர்சிப்பவரின் அறியாமையினாலேயே எழுப்பப்படுகின்றன. இவற்றால் இருதரப்பிற்கும் பயனில்லை. இரண்டாம் வகை விமர்சனங்கள் கவனிக்கப்படவேண்டியவை. இந்த விமர்சனங்களின் நோக்கங்கள் உள்ளே ஒளிந்திருக்கும். இவை பெரும்பாலும் அருகிலிருப்பவர்களாலேயே எழுப்பப்படும். விமர்சிக்கப்படுபவரின் கவனத்தை ஈர்ப்பது அல்லது காயப்படுத்துவதுதான் இதன் நோக்கம்.

மூன்றாவது வகை விமர்சனங்கள் தம்மீது உள்ள அக்கறையால் தமது நலன் விரும்பிகளால் வெளிப்படுத்தப்படுபவை. இந்த வகை விமர்சனங்கள் சமயத்தில் காரசாரமாகக்கூட இருக்கலாம். அதில் உள்ள அக்கறையைப் புரிந்து கொண்டு நம்மை நாமே திருத்திக்கொள்ள வேண்டும். இவர்களுக்கு நம் பதில் உள்ளார்ந்த நன்றிதான். ஒன்றைப் புரிந்து கொள்வோம். நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எல்லாவற்றையும் மாற்ற முடியாது. எதையும் எதிர்நோக்காவிடில் மாற்றங்களே இருக்காது.

# உனக்கு நீரே நீதிபதி



பலசமயங்களில் நீங்கள் மற்றவர்களின் கருத்தை ஏற்கும் தூண்களாக இருந்து வருகிறீர்கள். நீங்கள் அழகாக இருப்பதாக நினைக்கிறீர்கள் அவலட்சணமாக இருப்பதாகப் பிறர் சொன்னால் அப்படி இருப்பதாகக் கருதுகிறீர்கள். ஆக நீங்கள் நீங்களாக இருப்பதில்லை அடுத்தவரது கருத்துகள் மாறினால் நீங்களும் மாறவேண்டிய நிலையில் இருக்கிறீர்கள்.

முதலில் தைரியமாக உங்களைச் சார்ந்து இருங்கள். உங்களைத் தவிரவேறு யாரும் உங்களை நல்லவராகவோ கெட்டவராகவோ மாற்ற இயலாது பொய்யான பிறரின் கருத்துக்களும் நீங்கள் கனவுலகில் வாழ்வதற்கு எந்தவித வித்தியாசமும் இல்லை. ஒருவர் உங்களைப் புகழும் போது அவர் சக்தி மிக்கவராகத் தெரிகிறார்.

நல்ல சிந்தனைகளைச் சொல்லில் வெளிப்படுத்துபவரை விட செயலில் வெளிப்படுத்துபவரே உயர்ந்து நிற்கிறார்.




# அமலமரித்தியாகிகள் சபையினருக்கும், அமல மரித்தியாகிகள் சபையிலில்லாதோருக்கும் ஏற்பட்ட போட்டியும் புரிந்துணர்வின்மையும்

**- அருட்பணி S.V.B.மங்களராஜா -**

அத்துடன்மேலும்அமலமரித்தியாகிகள் சபையினரை இலங்கைக்கு அனுப்ப வேண்டியதில்லையென்று சபை நிறுவுனர் புனித யூஜின் டிமசனட்டுக்கு எழுதும்படி ஆயர் பெற்றக்கினிக்கு ஆலோசனை வழங்கியது. இந்த இரு குருக்களுமே யென்றும் செமேரியா அ.ம.தி அடிகள் நம்பினார். ஆயினும்ஆயர்பெற்றுக்கினி இவ்வாலோசனைக்கு உடன்பட மறுத்து விட்டார்.

செமேரியா அடிகளின் இன்னுமொரு பெரிய சந்தேகம் யாழ்ப்பாணத்தில் அமலமரித்தியாகிகள் சபையைச் சாராதோர் கூடும் போது அமலமரித்தியாகிகள் சபையினர் பற்றிக்குறையாகக்கதைப்பதையே வழக்கமாக கொண்டிருந்தனர் என்பதாகும். இச்சந்தேகத்தை உறுதிபடுத்தக்கூடிய ஒரு நிகழ்வும் ஒரு முறை இடம்பெற்றது. அந்நாட்களில் யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த இத்தாலிய நாட்டவராகிய விஸ்தாரினி (Vistarini) அடிகள் எனும் ஒரு மறைமாவட்டக்குரு (Secular Priest) எது வித உட்பூசல்களுக்கும் சிக்காதவர், தமது குருத்துவப் பணியில் மட்டும் கடமையுணர்வுடன் மக்களின் ஆன்மீக நலனில் அக்கறையுள்ளவராக பணியாற்றிக்கொண்டிருந்தவர், ஒரு முறை கண்ணீர் சிந்திய வண்ணம் செமேரியா அடிகளிடம் வந்து ஏன், எதற்கு என்று ஒன்றுமே கூறாது வந்து மன்னிப்புக் கோரினார்! செமேரியா அடிகள் யேசு சபையினரின் யாழ்ப்பாண வருகைபற்றிக் கொண்டிருந்த எண்ணம் ஒருவேளை சரியாக இருந்திருக்கலாம்.

அவர்கள் யாழ்ப்பாணம் வந்தால் தமது இருப்பை யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாக்க முயன்றிருக்கலாம் என்றும் அதனால் இரண்டு துறவற சபைகளுக்குமிடையில் (யேசு சபையினருக்கும், அமலமரித்தியாகிகள் சபையினருக்குமிடையில்) போதியளவு புரிந்துணர்வு ஏற்படாதிருக்க வாய்ப்புண்டு என்றும் அவர் கருதினார். அப்படியிருந்தும் 1848ம் ஆண்டு ஆயர் பெற்றக்கீனியவர்கள் அப்போது மதுரை அப்போஸ்தலிக்க முதல்வராக இருந்த பேரருட்திரு கனோஸ் (Canoz) யே.ச அவர்களுக்குச் சில இயேசுசபைக் குருக்களை அனுப்பிவைக்கும்படி கடிதம் எழுதும்படி கேட்டபோது செமேரியா அடிகள் எதுவித மறுப்பும் தெரிவிக்காது உடனடியாக எழுதினார்.

இந்த வேண்டுகோளின் விளைவாகவே அதேவருடம் கஸ்தானியர் யே.ச அடிகள் யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டார். பிறிதொருநகர்விலும் அமலமரித்தியாகிகளுக்கும் யேசு சபையினருக்குமிடையில் சில சிக்கல்கள் எழுந்தன. 1848ம் ஆண்டு ஒரு இளம் இங்கிலாந்து நாட்டு யேசுசபைக் குருவாகிய ஸ்ரிக்லாண்ட் (Strick land) அடிகள் ஒரு உயர் நிலைப் பாடசாலை (College) ஒன்றை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயக் கொழும்புக்கு 1848ல் வந்திருந்தார். இவர் அவ்வருடம் ஜுன் மாதம் யாழ்ப்பாணத்திற்கும் வந்தார். இவர் செமேரியா அடிகளுடன் நட்புறவுடன் பழகியது மட்டுமல்ல அந்நாட்களில் ஒருமுறை செமேரியா அடிகள் நோயுற்றிருந்த போது அவருக்குதவியாகவுமிருந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் யேசு சபையினர் உயர் நிலைப்பாடசாலைகளை ஆரம்பிக்கும் முயற்சியானது துவக்கத்தில் அமலமரித்தியாகிகள் சபையினருடன் உடன்பாட்டுக்கு எதிரானது என்று அமலமரித்தியாகிகள் சபையினர் கருதினர். ஸ்ரிக்வாண்ட் யே.ச அடிகள் யாழ்ப்பாணத்திலிருந்த போது செமேரியா அடிகளுடன் மேற்கொண்ட உரையாடல்களின் போது யாழ்ப்பாணத்தில் ஒரு உயர் நிலைப்பாடசாலையை யேசு சபையினர் ஏற்படுத்துவது பற்றிய கருத்தை முன்வைத்தார். செமேரியா அடிகள் அதற்குப்பதிலளிக்குமுகமாக யாழ்ப்பாணத்தில் ஒரு முதல் நடவடிக்கையாக ஒரு சிறிய குருமடம் ஒன்றை ஆரம்பிக்குமுகமாக இரு அமல மரித்தியாகிகளை அனுப்பிவைக்கும்படி ஏற்கெனவே சபை நிறுவுநரும் முதல்வருமாகிய ஆயர் யூஜின் டி மசனட் ஆண்டகைக்குக் கடிதம் அனுப்பிவைத்துள்ளதாகக் கூறினார். செமேரியா அடிகளின் இந்தப்பதில் இரண்டு விடயங்களைச் சுட்டிக்காட்டியது.

(தொடரும்...)



**வீ**ணாகப் பேசி நேரத்தை வீணடிக்காமல் முக்கியமான விஷயத்தைச் சுருக்கமாகப் போனில் பேசுங்கள். இது உங்களது ஆரோக்கியத்திற்கும் பொன்னான நேரத்திற்கும் நல்லது. மொபைல் போன்கள் தங்களது செய்திகளை நினைத்த நேரத்தில் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் ஒரு அரிய கண்டுபிடிப்பு என்பதை மறந்து, தங்களுடைய

# செல்போன்கள்

பணத்தின் அளவையும் வசதியையும் மற்றவர்களுக்கு அறிவிக்கும் ஒரு காட்சிப் பொருளாய் அதை மாற்றிவிடக் கூடாது. "செல்போன் இல்லையானால் எனக்குக்கையும் ஓடாது காலும் ஓடாது" என்று ஒரு சிலர் சொல்வதைக் கேட்டிருப்போம். சிலர் பயன்படுத்துவதைப் பார்த்தால் கை, கால்களை நகர விடாமல் செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எந்த ஒன்றுமே அளவுக்கு மிஞ்சினால் ஆபத்துதான். அளவோடு பயன்படுத்தி நலமோடு வாழ்வோம்.

# கச்சதீவுத் திருவிழாவில் பங்கேற்க 5,000 இந்தியப் பக்தர்கள் முற்பதிவு

அடுத்த மாதம் நடைபெறவுள்ள கச்சதீவுத் திருவிழாவில் பங்கேற்பதற்கு இதுவரை 5 ஆயிரம் இந்தியப் பக்தர்கள் பதிவு செய்துள்ளதாக, ராமேஸ்வரம் வேட்காடு பங்குத்தந்தை சகாயராஜ் தெரிவித்துள்ளார்.

கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவம் அடுத்த மாதம் 11 ஆம் 12 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. கடந்த டிசெம்பர் மாதம் திறந்து வைக்கப்பட்ட புதிய ஆலயத்திலேயே இம்முறை திருவிழா இடம்பெறவுள்ளது.

கடந்த ஆண்டு பெப்ரவரி 20 ஆம் மற்றும் 21 ஆம் திகதிகளில் நடைபெற்ற கச்சதீவுத் திருவிழாவில் 3 ஆயிரத்து 249 இந்தியப் பக்தர்கள் பங்கெடுத்திருந்தனர்.

இந்த ஆண்டு திருவிழாவில் பங்கெடுப்தபற்காக இதுவரையில் 5 ஆயிரம் பேர் வரையில் பதிவு செய்துள்ளனர் என்று தெரியவருகிறது.

## பொதுநிலையினர் கழகத்தின் ஏற்பாட்டில் வினாவிடைப் போட்டி

### உப்பாக ஒளியாக

**ஒவ்வொரு பிரிவுகளுக்கும் கொடுக்கப்பட்டுள்ள வினாக்கள்**

01.பிரிவுIதரம் (6 – 7)
- பகுதி 1 - 1-30
- பகுதி 11- 1-75
- பகுதி 111 - 1-15
- பகுதி 1V - முழுவதும்

02.பிரிவுIIதரம் (8 – 9)
- பகுதி 1 - 1-40
- பகுதி 11 - 1-100
- பகுதி 111 - 1-30
- பகுதி 1V - முழுவதும்

03.பிரிவு 111 தரம் (10 - 11) வினாக்கொத்தில் உள்ள எல்லா வினாக்களும் இவற்றுடன் ஒவ்வொருபிரிவுக்கும் சமகாலத்தோடு தொடர்புடைய தலைப்புக்களில் கட்டுரை வரையுமாறும் கேட்கப்படும்.

**பங்கு மட்டப் போட்டிகள்: 23.04.2017 அன்று இடம் பெறும்.**
**மறைமாவட்டப் போட்டிகள்: 07.05.2017 அன்று இடம் பெறும்.**

தயார்படுத்தலுக்கான வினாக்கொத்துப் பிரதி பங்குத்தந்தையர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தமது பங்குகளுக்குத் தேவையான வினாக்கொத்துக்களை பொது நிலையினர் கழகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

## புதிய குரவரின் நன்றித் திருப்பலி

மாரீசன்கூடல் புனித கயித்தார் ஆலயத் திருச்சபையைச் சேர்ந்த கீதபொன்கலன் மங்களறோஸ் தம்பதிகளின் புதல்வன் அருட்பணி கீதபொன்கலன் பீட்சுஜாகரன் அ.ம.தி அவர்கள் 05.02.2017 அன்று தனது நன்றித் திருப்பலியினை புனித கயித்தார் ஆலயத்தில் ஒப்புக்கொடுத்தார். பங்குத்தந்தை அருட்பணி பாலதாஸ் பிறாயன் அவர்களின் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. மேற்படி நிகழ்வில் மண்ணின் மைந்தர்களான இப்பங்கின் அருட்பணியாளர்கள் பங்குபற்றினர்.

இவ்வருடம் இப்பங்கின் முதல் குருவான அருட்பணி சவிரிப்பிள்ளை எட்மன் றெஜினோல்ட் அ.ம.தி அவர்கள் குருத்துவ வெள்ளிவிழாவினை கொண்டாடுவது இப்பங்கிற்கு இரட்டிப்புமகிழ்ச்சியைக் கொடுக்கிறது.

# புதிய பார்வையில் நோன்பு

அருட்பணி. றேஜீஸ் இராச நாயகம்

**பு**திய பார்வையில் நோன்புதவக் காலத்தின் 40 நாட்களில் பலவிதமான ஒறுத்தல்முயற்சிகளில்இதியாகசெயல்களிலும் ஈடுபட நாம் அழைக்கப்படுகின்றோம் ஒறுத்தல் முயற்சிகளால் என்ன பயன்? தவக்கால திருப்பலியின் தொடக்க உரை இவ்வாறு நன்றி கூறுகின்றது. “எங்கள் ஒறுத்தல் முயற்சியால் மனத்தை மேலே எழுப்புகின்றீர் ஆணவத்தை, தீயகுணங்களை அடக்குகின்றீர்: நற்பலன்களையும் அதன் பரிசான நல்வாழ்வையும் எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக வழங்குகின்றீர்.” எனவே, தவமுயற்சிகள் நம்மை இறைவனோடு நெருங்கிய உறவு கொள்ளச் செய்கின்றன. நோன்பின் பண்புகளையும் பலன்களையும் திருவிவிலியத்தின் பல பகுதிகள் நன்கு எடுத்துரைக்கின்றன. பல நோக்கங்களுக்காக நோன்பு கடைப்பிடிக்கப்பட்டதை விவிலியம் காட்டுகிறது.

**01) இறந்தோருக்காக நோன்பு:**

நெஞ்சிற்கு நெருக்கமானவர்கள் இறக்கும்போது, அந்த பிரிவுத்துயர்தாளாமல் உணவை ஒறுத்தனர் இஸ்ராயேல் மக்கள்.

**02) நாட்டுக்காக பொதுமக்களின் நோன்பு:**

இஸ்ராயேல் மக்களனைவரும் பொது நோக்கத்திற்காக நோன்பிருந்த நேரங்களும் பலவுண்டு.

**03) பாவக்கழுவாய் திருவிழாவின்போது:**

இஸ்ராயேல் மக்கள் பல திருநாட்களை கொண்டாடினர். அவற்றுள்பாவக்கழுவாய் திருவிழாவின்போது, தங்கள் பாவங்களுக்கு பரிகாரமாக, அனைவரும் வேலை செய்யாமல் நோன்பிருக்க வேண்டும் என்பது யூதச் சட்டம் (லேவியர்16:29)

**04) இறைவேண்டலின் போது:**

தனிப்பட்ட கருத்துக்களுக்காக இறைவனிடம் வேண்டும்பொழுது, நோன்பிருந்து செபித்தால் அது நிறைந்த பலன் தருமென்று இஸ்ராயேலர் நம்பினர். (தி.ப.25:13)

## தவக்காலத்தில்



## நோன்பு

**05) இறைபிரசன்னத்தை உணர:**

சீனாய் மலையில் மோசே ஆண்டவரும் 40 பகலும் 40 இரவும் ஒன்றித்திருந்தபோது அவர் அப்பம் உண்ணவுமில்லை தண்ணீர் பருகவும் இல்லை.

# நோன்பிருப்பதற்கு இருபது காரணங்கள்

1. உடலையும் உயிரையும் ஆன்மாவையும் சுத்தப்படுத்தித் தூய்மையாக்க.
2. இறைவனது வழிகாட்டுதலையும் வெளிப்பாட்டையும் பெற்றுக் கொள்ள.
3. இறைவனது திருமுகத்தை நாடி அவரோடு இன்னும் நெருங்கிய உறவுகொள்ளும் படியாக.
4. இறைவனது குரலை நன்கு செவிமடுத்து அவரது திருவுளத்தை இன்னும் நன்றாக அறிந்துகொள்ளும் படியாக.
5. இறைவனின் வல்லமை உங்களுடாக ஆற்லுடன் பாய்ந்துசெல்ல வேண்டும் படியாக.
6. ஆன்மீக வலிமையும் மேலாட்சியுமுடைய நிலையை ஏற்படுத்துவதற்காக
7. உங்களுக்குள் இருக்கும் எந்த அடிமைத்தனத்தையும் தகர்ப்பதற்காக
8. மனத்தெளிவைப் பெறுவதற்காக.
9. தீங்கான அல்லது தளர்ச்சிதரும் எண்ணங்களிலிருந்து விடுபடுவதற்காக.
10. மனச்சோர்வைமேற்கொள்வதற்காக.
11. உங்கள் வாழ்வில் அலகையின் வலிமையைக் குன்றச் செய்வதற்காக.
12. வாழ்வு கைமீறிச் செல்வதுபோல் தோன்றும்போது சமநிலையை ஏற்படுத்துவதற்காக.
13. உடலும் ஆன்மாவும் வலுப்பெறுவதற்காக.
14. எதன் மீதும் உடல்கொள்ளும் இச்சையை முறியடிப்ப தற்காக.
15. உங்களுக்குஇறைவன்தந்தகொடைகளைக்கண்டுபிடிப்பதற்காக.
16. பாரச்சுமைகளிலிருந்துவிடுபடுவதற்காக.
17. தூய்மையானதோர் உள்ளத்தையும் சரியான மனப்பான்மையையும் அடைந்துகொள்ளும் படியாக.
18. மாறுபாடானஉணர்ச்சிகளிலிருந்துவிடுபடும் படியாக.
19. குணம் அடையும் படியாக.
20. உங்களால் செய்ய இயலாதவற்றைச் செய்வதற்கு வலுப்பெறும் படியாக.

# வளன் பப்பாவின் கேள்வி பதில்கள்




**கேள்வி: கேப்பாபுலவுப் போராட்டத்தை உங்களை மக்கள் கண்டார்களாமே?**

பதில் : கேப்பாப்புலவு மட்டுமல்ல, இயேசு பல்வகை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கவே வந்தார். அநீதி எங்கெல்லாம் தலைவிரித்தாடுகிறதோ அங்கெல்லாம் நிற்பார் இந்த வளனார் பப்பா போராட்டம் எல்லாம் எனக்கு கார் ஒட்டம் மாதிரி.

**கேள்வி: இக்காலத்தில் சில இளம் பெண்கள் கண்மூடித்தனமாக காதலித்து, தம் வாழ்க்கையை சீரழித்து விடுகிறார்களே?**

பதில்: அவர்கள் கண் மூடித்தனமாக காதலிப்பதில்லை கண்ணை மூடிக் கொண்டு காதலிக்கிறார்கள் அதனால் தான் படுகுழியில் விடுகிறார்கள் காதலுக்கு கண்ணில்லை என்பது இதுதானோ? (நான் அறிவுக் கண்ணைச் சொன்னன்)

**கேள்வி: கடவுளுக்கும் பேய்க்கும் என்ன ஒற்றுமை?**

பதில் : இரண்டுமே மனித அவதாரம் எடுக்கும்

**கேள்வி: கஞ்சா விற்பனையில் உலகில் யாழ்ப்பாணம் முன்னிலையாமே? எப்போது உமது Super Marketக்கு அது வருகிறது?**

பதில்: பாதை திறந்ததால் தான் இந்தப் போதை! யாழ் சமூகத்தின் கல்வி, பண்பாடு, மரபு என்பன ஆட்டம் காண்கிறது அது இதனால்தானோ? என்னுடைய Market க்கு அது எப்போதோ வந்துவிட்டது. அதனால்தான் என்னுடைய Market இப்ப Super Market ஆகியுள்ளது.

**கேள்வி: வருகின்ற கிழமை தவக்காலமே! தவக்காலத்தில் சீரியல் (தொடர்நாடகம்) ரீ.வியில் பார்க்கலாமா? அல்லது உயிர்ப்பு விழாவிற்குப் பிறகு You Tube இல் தான் பார்க்க வேண்டுமா?**

பதில்: ஏன்? அவற்றை தவக்காலத்திலும் பார்த்து பின் You Tube பிலும பார்த்து, Whats app லும் பார்க்கலாமே? தவக்காலம் வெறுமையாக்களின் காலம் தன்னிலை உணராத தவக்காலம் பயனற்றதே!

**கேள்வி: தவக்காலத்தில் என்ன செய்யவேண்டும் என்ன செய்யக்கூடாது என்று எனக்கு ஒண்டும் புரியல?**

பதில் : “பிறருக்கு நீ நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை தீமையாவது செய்யாதே” எண்டு மட்டும் நான் சொல்லமாட்டேன்! நீ பிறருக்கு நன்மை செய்யாவிட்டாலும் அதுவும் தீமையே!ஆகவே தவக்காலத்தில் நன்மை செய்! நன்மை செய்யாமல் விடும் தீமையைச் செய்யாதே!

**கேள்வி : பங்கில் இளையோர் ஒன்றியத்தில் பெண்பிள்ளைகள் இணைந்து செயற்பட சில பெற்றோர் தயங்குவது ஏன்?**

*பா. மேரி அனற்விக்சலா, மானிப்பாய்*

பதில்: “எல்லாமே ஒரு தற்பாதுகாப்பிற்காகத் தான்” என்று பெற்றோர் கூறுவர் அது காப்பா? ஆப்பா? என்பது பின்னர் தான் தெரியவரும். இளம் பெண்களின் சமூக ஈடுபாடே அவர்களை நல்ல குடும்பத் தலைவிகளாகவோ துறவிகளாகவோ உருவாக்குகிறது. “பாதுகாப்பு” எனும் பெயரில் பல இளம் பெண்பிள்ளைகளின் அழகான ஆளுமைகள் கண்டு கொள்ளப் படாமல் போவது தான் வருந்துதற்குரியது. இளையோரும் பொறுப்புடன் நடந்து கொள்வது அவசியமானது !

**கேள்வி: இன்றைய சமூகம் சீரழிந்து கொண்டு போவதற்கு வெளிநாட்டு மோகம் காரணமா?**

பதில்: இல்லை. வெள்ளையா இருக்கிறவன் பிழை வடமாட்டான். அவர்களை குற்றம் சொல்ல வேண்டாம்! இன்றைய சமுதாயம் சீரழிவிற்கு இரண்டு “பாவனைகள்”முக்கிய காரணம்.

01.தவறான தொழிநுட்பசாதன பாவனை

02.மதுபாவனை

*க.சுவஸ்திகா, குருநகர்.*

**கேள்வி: திருவிழாவில் பங்குகொள்கிறாரோ இல்லையோ பவனிவேளையில் வெளியாடம் பரத்தில் மாத்திரம் பங்கு கொள்கிறார்களே! சரியா? பிழையா?**

பதில் : சும்மா அவர்கனை குற்றம் சொல்லவேண்டாம் விட்டுவடுங்கள் அவர்கள் எதைச் செய்தாலும் அதில் ஒரு அர்த்தம் இருக்கும்! வழிபாடுகளில் தூங்கிக்கொண்டிருப்பவர்களை வெடிகொழுத்தி எழுப்பிவடுகிறார்கள் அவ்வளவுதான் என்ன ஒரு சமூகசேவை

*வி.ஆன் சாருஜா, குருநகர்*

**கேள்வி: தமிழில் எதுகை மோனைக்கு உதாரணம் சொல்லுங்களேன்?**

பதில் : வருமானம் இல்லாமல் அவமானப்பட்டு தன்மானமிழந்து விமானத்தில் போவதைவிட கேலி செய்யினும் கூலிக்கு வேலியடைத்து தாலிகட்டி ஜாலியாக வாழ்வது மேல்!

**கேள்வி: நீர் மாதா தொலைக்காட்சி பார்ப்பதில்லையா? நான் அதுமட்டும் தான் பார்ப்பேன். அதுபற்றி என்ன நினைக்கிறீர்?**

பதில் : நல்லது. ஆனால் அடிக்கடி அதைப்பார்த்து “மாதாவை தொலைவில் காட்சியாக” மட்டும்! பார்த்துவிடாதீர்! அவரைப்போல் பிறரன்புசெயலில் ஈடுபட்டு மாதாவின் சாட்சியாக வளரப்பாரும்! அதையும் பாரும்

பப்பாவிடம் கேள்வி கேட்க விரும்புவோர் கேள்விகளை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பவும்

புனித வளன் கத்தோலிக்க அச்சகம், 360 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

"தர்மம் தலைகாக்கும்" என்பது முதுமொழி. பிறர் கேட்டுநாம் கொடுப்பது பிச்சை, பிறர் கேளாமலே,நாமாககுறிப் பறிந்து கொடுப்பது தர்மம். இயேசுவின் மலைப்பொழிவில் அவர் கூறிய வார்த்தைகள் காலத்தால் அழியாதவை. " The History of the Civilisation" என்னும் வரலாற்று நூலை எழுதிய ஆசிரியர் உலகப்புகழ் பெற்றஅர்னால்ட் டாயின் பீ (Arnold Toynbee) அவர் கூறுகிறார் "உலகவரலாற்றில் எத்தனையோ மனிதர்கள் தத்துவ ஞானிகள் அரசர்கள், சர்வாதிகாரிகள், விஞ்ஞானிகள், சிந்தனையாளர்கள் தோன்றினாலும் அவர்களின் வரலாறு, கருத்துக்கள் ஒருசில ஆண்டுகள் அல்லது நூற்றாண்டுகள் நிலைத்திருந்திருக்கலாம். ஆனால் ஒருமனிதன் வரலாற்றில் நுழைந்து துவக்கிவைத்த சிந்தனைகள், அவரை பின் பற்றுபவர்களின் எண்ணிக்கை, உலகின் இறுதிப்பயணம் வரை நிலைத்திருக்கக் கூடியகருத்துக்களுக்குச் சொந்தமானவர் ஒருவர் உண்டு என்றால் அவர் தான் இயேசு கிறிஸ்து. அவரின் வரலாற்றுப் பதிவுகளுக்கு முடிவே இல்லை" என்கிறார். ஆம், அது உண்மை. தவக்காலத்தில் மனிதன் செய்திடவேண்டிய காரியங்கள் மூன்று

1.தர்மம்
2.நோன்பு
3. செபம்.

தர்மம் கொடுப்பதுமற்றக் கைக்குக் தெரியக்கூடாது. மீண்டும் தந்துவிட முடியாத நிலையில் உள்ளவர்களுக்கு கொடுக்கப்படவேண்டிய ஒன்று. தர்மங்களில் பல வகைகள் உண்டு




1.புகழ் பெறுவதற்காக
2. தர்மசங்கடமானநிலையில் தர்மம் கொடுத்தல்
3.லஞ்சம், ஊழல், ஏமாற்றுதல் போன்ற அநீத வழியில் சம்பாதித்த தொகையில் ஒரு பங்கு தர்மமாகக் கொடுத்தல்
4. தான் செய்தபாவங்களுக்குப் பரிகாரமாக கடவுளுக்கே லஞ்சம் கொடுத்தல்
5.சொத்துகள் ஏராளமாகச் சேர்த்தபின் கடைசிக் காலத்தில் அதைஎப்படிச் செலவழிப்பது என்று முழிக்கும் போது ஏதோகொஞ்சம் தர்மம் கொடுப்போம் என்றெண்ணிக் கொடுப்பது.
6.வாரிசு இல்லாதவர்கள் அறக்கட்டளையாக அதைச் செய்வதுஎனப் பலதர்மங்கள் உண்டு.

தவக்ககாலத்தில் கிறிஸ்துவர்கள் நோன்பு இருப்பார்கள். இயேசுபெருமான் 3 காரியங்களை வரிசைப் படுத்து கின்றார்.

1.தர்மம்
2.நோன்பு -உபவாசம்
3.செபம் .

வலக்கை இடும் தர்மம் இடக்கைக்குத் தெரியக்கூடாது என்பார் இயேசு. கோவிலில் காணிக்கைப் பெட்டியில் பணம் போடுவதைப் பார்த்த இயேசு,பணக்காரர்கள் தங்களிடமிருந்த பணத்திலிருந்து ஒரு பகுதியை காணிக்கை போட்டார்கள். ஆனால் ஏழைக் கைம் பெண் தன்னிடமிருந்த 2 செப்புக்காசுகளைப் போட்டாள். ஏழையின் காணிக்கையை கடவுள் ஏற்றுக் கொண்டார் என இயேசு கூறுகிறார். கர்ணன் கவச குண்டலங்களைத் தானமாகதந்தான். சிபி தன் உடலின் ஒருபகுதியை புறாவுக்காகக் கொடுக்கத் துணிந்தான். நம் காலத்தில் மகாகவிபாரதியும் நடிகர் என்.எஸ். கிருட்டிணனும் இப்படிக் கொடுத்து மகிழ்ந்தனர் என அறிகிறோம்.

உபவாசம், நோன்பு, ஒருசந்தி, விரதம் போன்றநாட்களில் நாம் ஒரு வேளை அல்லது இரு வேளைசாப்பிடாமல் இருக்கிறோம். அது நல்லது. ஆனால் அதனினும் நன்று நாம் சாப்பிடக்கூடிய உணவை சமைத்து, ஏழை எளியவர்களுக்கு தானமாகக் கொடுப்பது. நாம் சாப்பிடாமல் இருந்தால்,அந்தச் சமையலுக்கு உரியபொருட்கள் நம் வீட்டில் தானேஉள்ளது. அந்தப் பங்கினை நாம் சாப்பிடுவது கடவுளுக்குப் பிடிக்காதசெயல். அதைத் தீட்டுப் பொருள் என்றேசொல்லலாம்.

பேராசிரியர் அ.குழந்தைராஜ்

## மேய்ப்புப்பணியில் குடும்பவாழ்வுக்கு முன்னுரிமை
## இந்திய ஆயர்கள் தீர்மானம்

திருஅவை மற்றும் குடும்பங்களின் உறவுகளிலிருந்து பிரிந்து வாழும் மக்களுக்கு, மேய்ப்புப்பணியில் சிறப்புக் கவனம் செலுத்துவதற்கு, இந்திய ஆயர்கள் தீர்மானித்துள்ளனர்.

இந்திய இலத்தீன் வழிபாட்டுமுறை ஆயர் பேரவையின் 29வது நிறையமர்வு கூட்டத்தின் இறுதியில், அறிக்கை வெளியிட்ட ஆயர்கள், திருமண உறவு முறிந்த நிலையில் வாழ்கின்ற மக்களுக்கு, மேய்ப்புப்பணியில் உடனடியாக அக்கறை காட்டப்பட வேண்டும் என்று கூறியுள்ளனர்.

குடும்பங்களில் அன்பின் மகிழ்வை ஊக்குவித்தல் என்ற, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் திருத்தூது அறிவுரைமடலின்(Amoris Laetitia) அடிப்படையில், கத்தோலிக்கக் குடும்பங்கள் உயிரூட்டம் பெறுவதற்கான வழிகளை ஆராய்ந்த ஆயர்கள், குடும்பக் கட்டுப்பாடு போன்ற விவகாரங்களில், கத்தோலிக்கப் போதனைகளிலிருந்து, குடும்பங்கள் விலகிச் செல்கின்றன என்றும் கூறியுள்ளனர்.

கடும் வறுமையில் வாழும் குடும்பங்கள், இருவேறு மதங்களைச்சேர்ந்த தம்பதியர், பெற்றோரில் ஒருவரை மட்டும் கொண்டுள்ள குடும்பங்கள், மாற்றுத் திறனாளிக் குழந்தைகள் உள்ள குடும்பங்கள், துன்புறும் குடும்பங்கள், குடியேற்றதாரர், நோயாளர், மற்றும் வயது முதிர்ந்தவர்களைக் கொண்டிருக்கும் குடும்பங்களுக்கு, திருஅவையின் ஆதரவு மிகவும் தேவைப்படுகின்றது என்றும், ஆயர்கள் தெரிவித்துள்ளனர்.

## கருக்கலைப்பு சட்டத்திற்கு எதிர்ப்பு
## - இலங்கை ஆயர்கள் -

கருக்கலைப்பை சட்டப்படி அங்கீகரிப்பதற்கு இலங்கை அரசு எடுத்து வரும் முயற்சிகளுக்கு, கத்தோலிக்க அரசியல் வாதிகள் உட்பட, அனைத்துக் கத்தோலிக்கரும் எதிர்ப்பு தெரிவிக்குமாறு, இலங்கை ஆயர் பேரவை கேட்டுக்கொண்டுள்ளது.

கருக்கலைப்பு சட்டத்திலுள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கு, இலங்கை அரசு அண்மை மாதங்களாக முயற்சித்து வருவதை முன்னிட்டு அறிக்கை வெளியிட்டுள்ள இலங்கை ஆயர் பேரவை, நாட்டின் அனைத்துக் கத்தோலிக்கருக்கும் இவ்வாறு, அழைப்பு விடுத்துள்ளது.

2016ம் ஆண்டின் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில், இதேபோன்று அரசு முயற்சித்ததை முன்னிட்டு, அவ்வாண்டு ஆகஸ்ட் 18ம் திகதி, இலங்கை ஆயர்கள், தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்து, நீதித்துறை அமைச்சருக்கு கடிதம் அனுப்பியதையும், ஆயர்களின் தற்போதைய அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

அதற்குப் பதிலளித்த நீதித்துறை அமைச்சு, இத்தகைய நடவடிக்கை குறித்து அரசு இன்னும் சிந்திக்கவே இல்லை எனவும், இந்த விவகாரத்தில் அரசு ஆர்வமாக இல்லையெனக் கூறியதையும், ஆயர்களின் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில், ஒவ்வோர் ஆண்டும், ஏறக்குறைய நான்கு இலட்சம் பெண்கள் கருத்தரிக்கின்றனர். இவர்களில் ஏறக்குறைய 15 ஆயிரம் பெண்கள், சட்டத்திற்குப் புறம்பே கருக்கலைப்பு செய்கின்றனர், இவர்களில் பத்துப் பேர் வீதம் ஒவ்வோர் ஆண்டும் இறக்கின்றனர் என ஊடகச் செய்திகள் கூறுகின்றன.

## பூர்வீக நிலங்களுக்கான..
(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமது வாழ்வுக்கு விமோசனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் கடந்த தேர்தலில் இம்மக்கள் இந்த அரசாங்கத்திற்கு வாக்களித்து நம்பிக்கையோடு இருந்தவேளையில், அரசாங்கத்தின் இந்த அசட்டைப் போக்கினால் அவர்கள் பெரிதும் விசனமடைந்துள்ளனர். இவ்வாறான பல்வேறு முயற்சிகள் தோல்வியடைந்ததன் விளைவாகவே இன்று இம்மக்கள் கொளுத்தும் வெயிலையும், கொட்டும் மழையையும், பனிக்குளிரையும் பாராது குடும்பங்களாக குழந்தைகள், சிறுவர், முதியவர் உள்ளடங்கலாக இப் போராட்டத்தை நடாத்தி வருகிறார்கள்.

மக்களின் இந்த நியாயமான போராட்டத்தை உதாசீனம் செய்யாமல் அரசாங்கமும் சம்பந்தப்பட்ட வர்களும் இவ்விடயத்திற்கு முன்னுரிமைகொடுத்து தமது சொந்தக் காணிகளில், தமது சொந்த வீடுகளில் தாம் சுதந்திரமாக வாழவிரும்புகின்ற இந்த மக்களின் அபிலாஷைகள் நிறைவேற உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று யாழ். மறைவாட்ட நீதி சமாதான ஆணைக்குழுவின் அறிக்கையில் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

## பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்....
(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி நிகழ்வின் தலைவாரக ஜீவேந்திரா போல் அ.ம.தி அடிகளார் செயலாற்றினார்.

2012 - 2015 ஊடகக்கற்கை இளங்கலைமாணி மாணவர்கள் பட்டம் பெற்றவர்கள் 1. அருந்தவச் செல்வன் அனித் டிறொக்சன் 2. அல்பேட் பஸ்ரியன் 3. சுந்தரம்பிள்ளை ராஜேஸ்கரன் 4. வெற்றிவேல் துஸ்யந்தன் 5. அல்பிறெட் மொறிஸ்பெக்கர் 6. தயா ராணி துரை 7. கிறிஸ்துராசா ஜெகன் 8. க.ஆன் நிரோஜா 9. சுஜிதா துரைராஜன்

2015 - 2016 ஊடகக்கற்கை முதுகலைமாணி மாணவர்கள் 1. அருள்திரு பாலதாஸ் - பிரையன் இறையியல் இளங்கலைமாணிஉறுபாணியானா உரோம் 2. நித்தியானந்தன் - கஜிதரன் ஊடக இளங்கலைமாணி யாழ்.பல்கலைக்கழகம்.

## உள ஆற்றுப்படுத்தல்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

உள ஆற்றுப்படுத்தல் பாடநெறி தொழில்வாய்ப்பைப் பெற்றுத் தரும் ஒரு பாடநெறி" என்ற மையப் பொருளில் கருத்துரை வழங்கினார். மேலும் இந்நிறுவனத்தில் உளவியல் மற்றும் உள ஆற்றுப் படுத்தல் இளங்கலைமாணிப் பாடநெறியை ஆரம்பிப்பதற்கு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை ஆயரும் இயக்குநரும் விபரித்தனர். இயக்குநரான அருள்திரு இராசேந்திரம் ஸ்ரலின் அடிகளார் இந்நிறுவனத்தின் குடும்பம் மற்றும் உள ஆற்றுப் படுத்தல் செயற்பாடுகள்பற்றிய அறிக்கையை அவையில் சமர்ப்பித்தார். வருடாவருடம் நடாத்தப்படும் இப்பாட நெறியானது அயர்லாந்து தேசிய பல்கலைக் கழகத்தோடு இணைந்து நடாத்தப்படுவதால் அப்பல்கலைக்கழகமே சான்றிதழையும் வழங்குகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வார புனிதர்

# புனித சாட்




இவர் ஓர் ஆங்கிலேயர் நார்த்தம்பிரியாவில் பிறந்தவர். சியாட்டா என்றும் அழைக்கப்படுகின்றார். இவருடன் இவரது மூன்று சகோதரர்களும் குருத்துவத்தை தெரிந்துகொண்டார்கள். இவரது மூத்த அண்ணன் புனித செட் என்பவருடன் புகழ்வாய்ந்த லின்டிஸ் ஃபர்ன் துறவு மடத்திற்குக் கல்வி பயில அனுப்பப்பட்டார்.

அங்கே துறவு மடத்துக்குத் தலைவர் புனித எய்ட்டன் இவர்களுக்கு ஆசிரியராக இருந்தார்.

எய்ட்டன் இறந்த பின் சாட் அயர்லாந்து நாட்டிற்கு விரைந்தார். இதற்கிடையில் இவரது அண்ணன் செட் லண்டன் நகர் ஆயராகத் தெரிவுசெய்யப்பட்டார். இதனால் சாட் தனது தாயகம் திரும்பவும், ஆர்லாஸ் டிங்ஹராம் துறவு மடத்தின் தலைமையை ஏற்கவும் இசைவு தெரிவித்தார். இருப்பினும் மன்னன் ஆஸ்வின் இவரை யார்க் நகரின் ஆயராக்கிவிட்டார்.

ஆயர் பதவி பெற்ற பின்பு மறைமாவட்டம் முழுவதும் ஆன்மீக வாழ்வு முன்னேற்றம் பெறவும், மறை உண்மைகளை மக்கள் பிழையின்றிக் கற்றுக்கொள்ளவும் கடுமையாக உழைத்தார்.

இவ்வேளையில் 669 ஆம் ஆண்டு புனித தியோடர் காண்டர்பரி புதிய பேராயராக இங்கிலாந்து நாடு நோக்கி விரைந்து வந்தகையோடு ஆயர் சாட் என்பவரைச் சாடினார். “நீங்கள் முறைப்படி ஆயர் பதவிக்கு வரவில்லை” என்றார் சாட்டிடம். சாட் புனிதராக வாழ்ந்த காரணத்தினால் பொறுமையுடன் பதிலளித்தார். நான் முறைப்படி ஆயராகப் பொறுப்பேற்கவில்லை என்று உங்களுக்குத் தெரியுமாயின், இப்பதவியை இப்போதே விட்டுக்கொடுக்கிறேன். இப்பதவிக்கு நான் பொருத்தமானவன் என்று எப்போதும் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. கீழ்ப்படிதலின் நிமித்தமே இப்பணியை ஏற்றுக்கொண்டேன்” என்றார். இவ்வாறு பொறுமையுடனும் அமைதியாகவும் அளித்த பதில் பேராயரின் நெஞ்சைக் குளிர்வித்து விட்டது.

இத்தகைய மனநிலையில், ஆயர் மீண்டும் வாஸ்டின் ஹாம் செல்லுமுன் பேராயர் புனித தியோடோர் சாட், என்பவரை ஆயராக திருநிலைப்படுத்தும் சடங்கில் எதெல்லாம் குறைவாக இருக்கலாம் எனத் தோன்றியதோ அவற்றை ஈடுசெய்தனுப்பி வைத்தார். இப்போது ஜாருமென் என்ற பெர்சியா மறைமாவட்ட ஆயர் இறந்து விட்டார். அதனால் பேராயர் புனித தியோடோர், மன்னன் ஆஸ்வினிடம் ஒரு வேண்டுகோள் வைத்தார். அதன்படி ஆயர் சாட் மெர்சிரியா மறைமாவட்ட ஆயராகலாமே எனப் பச்சைக் கொடி அசைத்தார்.

இரண்டரை ஆண்டுகளே புதிய மறைமாவட்டத்தில் புணிபுரிய நேர்ந்தாலும், அனைத்திலும் இவரது அணுகுமுறை தலைவர் கிறிஸ்து இயேசுவைப் பிரதிபலித்தது. இதன் விளைவாக இவரது இறப்பின்போது இவருக்கு ஆலயங்கள் 31 அர்ப்பணிக்கப் பெற்றிருந்தன. ஆரம்பத்தில் துறவு மடத்தின் தலைவராக இருந்தவர் புனித சாட். ஆயர் பொறுப்பு இவருக்கு வந்து சேர்ந்தபின் கால்நடையாகப் பயணம்தான் இவர் விரும்பித் தெரிந்துகொண்டது. ப்ளேக் தொற்றுநோய் பரவிய காலத்தில் இவர் பலியாகிவிட்டார். இவரது இறப்புக்குப் பின் இவரது கல்லறையைத் தரிசிப்போருக்குப் பல புதுமைகள் நிகழ்ந்துள்ளன.

**சிந்தனை**

“உங்களுக்குக் கடவுளின் வார்த்தையை எடுத்துச் சொன்ன உங்கள் தலைவர்களை நினைவுகூருங்கள். அவர்களின் வாழ்வின் நிறைவை எண்ணிப் பார்த்து நீங்களும் அவர்களைப் போல் நம்பிக்கையுடையவராய் இருங்கள். இயேசு கிறிஸ்து நேற்றும இன்றும் என்றுமே மாறாதவர்” (எபி.13:7-8)

## நாற்பது வருட நிறைவு

பிறப்பு 06 . 09 . 1898



இறப்பு 09 . 03 . 1976

அமரர்

### யோனிஸ் மரியாம்பிள்ளை


நாற்பது ஆண்டுகள் கடந்துவிட்டன
நம்ப முடியாமல் இருக்கிறது!
உங்களால் உயர்ந்தவர்கள் அனேகர் - நீங்கள்
உத்தமனாய் வாழ்ந்து உன்னதரோடு
ஒன்றாகி உயர்ந்து நிற்கிறீர்கள்
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
எம் நெஞ்சங்களில் நீங்கள் வாழுவீர்கள்
நிர்மலன் அடியில் நீங்கள் எமக்காய்
நித்தமும் பரிந்துரை செய்யுங்கள் அப்பா!

**உங்கள் நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்**

AD/14/2017

## 2ம் ஆண்டு நினைவு

மலர்வு 23 . 02 . 1944



மறைவு 05 . 02 . 2015

அமரர்

### யோசப் யேசுதாசன் சுகுணராஜா

கலியாண நாற்பதாவது நினைவுநாளில்
காரிருள் விலகி பொழுது விடியுமுன்பே
கதறவைத்து கண்மூடி சென்றாயே
கடவுளிடம் ஒன்றாக கலந்தாயே
ஆருயிர் மனைவியையும் அன்புப் பிள்ளைகளையும்
அலறவைத்து ஆண்டவரிடம் அடைக்கலமானாய்
ஆண்டாண்டு பற்பல சென்றாலும்
ஆற்ற முடியாதது எம் ஆழ்ந்த துயரம்
வாழ்வும் சாவும் ஆண்டவன் சித்தம் என்பர்
நோய் தெரியாமலே போனது உங்கள் புண்ணியம்
எங்கள் நேசமுள்ள நேசரே – எமக்கு
இல்லை இந்த பூலோகத்தில் இனி மகிழ்ச்சி.

கருணைத் தெய்வமே உம்மிடம் வந்துள்ள உமது அடியான் யேசுதாசன் (சுகுணராஜா) இவ்வுலகில் தெரிந்தும், தெரியாமலும் செய்த பாவங்களை மன்னித்து விண்ணக ஒளியில் சேர்த்தருளும்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடவும். சமாதானத்தில் இளைப்பாறுவாராக.

**பிரிவால் துயருறும்**
**மனைவி, மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளை, உற்றார், உறவினர்.**

AD/12/2017

## விண்ணக வாழ்வின் 31ம் நாள் நினைவு

தோற்றம் 08 . 01 . 1937



மறைவு 24 . 01 . 2017

*அமரர்*

### பத்மநாதன் நதானியல் இராஜதுரை

( ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் )

“சீவியத்தில் உங்களை நேசித்தோம் மரணத்திலும் மறவோம்”

எம்மை விட்டு மறைந்தாலும் உமது பாச நினைவுகள் என்றும் எம்மை விட்டு அகலாது. என்றும் உம் நினைவால் வாழ்ந்திருப்போம். நீங்காத நினைவுகளுடன் உமது ஆன்மா சமாதானத்தில் இளைப்பாறுவதாக.

**118, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 9107**
**0726111986**

**பிரிவால் துயருறும்**
**அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.**

AD/13/2017

## தூய யோசவ் வாஸ் திருச்சொரூபம் விற்பனைக்கு



யோசவ் வாஸ் ஆண்டில் ஆலயங்களிலும், வீடுகளிலும் வைப்பதற்குரிய தூய யோசவ் வாஸின் அழகிய திருச்சொருபங்கள் மலிவு விலையில் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் விற்பனைக்கு உண்டு.

# தூய யோசவ்வாஸின் ஆன்மீகத்தை மாணவர்களுக்குக் கொடுப்போம் யாழ். ஆயர்

யாழ். மறைமாவட்ட திருவிவிலிய ஆணைக் குழுவின் 2017 ஆம் ஆண்டிற்கான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தும் நோக்கில் 13.02.2017 அன்று காலை 10.00 மணியளவில் யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் ஆணைக் குழு அங்கத்தினருக்கான கூட்டம், இயக்குநர் அருட்பணி ஏ.எவ்.பெனற் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

தூய யோசேவ்வாஸ் ஆண்டினை முதன்மைப்படுத்திய இவ் ஆண்டு செயற்றிட்டங்கள் பல இயக்குனரால் முன் வைக்கப்பட்டன. இக்கூட்டத்திற்குப் பிரதம அதிதியாகப் பங்கேற்ற யாழ். ஆயர் பேரருட்திரு கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் தமது உரையில் தூய யோசவ்வாஸ் அடிகள் இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று சொல்லொண்ணா துன்பங்களின் மத்தியிலும் தம்மை முழுமையாக அர்ப்பணித்துப் பணியாற்றி எம் முன்னோரின் விசுவாத்தினைச் சுடர்விடச் செய்தார். ஆயினும் எமது யாழ். மறைமாவட்டத்தில் இவரது உன்னத பணி மக்கள் மத்தியில் இன்னும் ஆழமாக வேரூன்றப்படவில்லை.

எனவே, இப்புனிதருக்கென முன்மொழியப்பட்ட இவ் ஆண்டில் மறைக் கல்வி நடுநிலையச் செயற்பாடுகளுடன் இவரது பணிவாழ்வில் முக்கியத்துவத்தை மக்கள் மத்தியில் ஆழப்படுத்துவதுடன் இவரது பணித்தளங்கள் ஆராயப்பட்டு அதனை அண்மித்த பங்குகளில் நற்செய்தி அறிவிப்பதிலான ஆர்வத்தைப மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் எனக் கூறினார்.

மேலும் ஆணைக்குழுவின்இவ் ஆண்டுச் செயற்றிட்டங்களில் தேசிய மறையாசிரியர் பரீட்சை, திருவிவிலிய வினாவிடைப் போட்டி, கத்தோலிக்க திருமறைத் தேர்வு, தூய யோசவ் வாஸ் ஆண்டின் சிறப்புக் கருத்தமர்வுகள் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

# மானிப்பாய் புனித அந்தோனியார் திருத்தலம் சூரிய ஒளி மின்வலுவூட்டல் பெற்றது



கடந்த 10.02.2017 அன்று மானிப்பாய் புனித அந்தோனியார் திருத்தலத்திற்கான சூரிய ஒளி மூலமான மின்வலுத் திட்டத்தை மின்வலு மற்றும் மீள் புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சர் மாண்பு மிகு ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய அவர்கள் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் பிரதி அமைச்சர் அஜித்.பி.பெரேரா அவர்களும், இலங்கை மின்சார சபை உயர் அதிகாரிகளும், புனித அந்தோனியாரின் பக்தர்களும் கலந்து கொண்டனர்.

மானிப்பாய் பங்குத்தந்தை அருட்பணி S.J.Q.ஜெயரஞ்சன் அடிகளார் இந்நிகழ்வுக்கு இறையாசீர் வழங்கியதுடன் இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தைத் சேர்ந்து கொண்டமைக்காக அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் நன்றிகளையும் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய அமைச்சா் இத்திட்டத்தின் வெற்றியானது முற்று முழுதாகப் பொது மக்கள் இதனைப் பராமரிக்கும் விதத்திலேயே தங்கியுள்ளது எனக் குறிப்பிட்டார். இந்நிகழ்வுகளுக்கான விருந்தினர்களை மானிப்பாய் புனித அன்னாள் றோ.க.த.க. பாடசாலை மாணவர்கள் பான்ட் வாத்திய இசைவழங்கி வரவேற்றனர்.

# தூய யோசவ்வாஸ் இறையியற் கல்லூரிக்கு புதிய அமைவிடம் திறந்து வைக்கப்பட்டது




யாழ். மறைமாவத்தில் 2012 ஆம் ஆரம்பிக்கப்பட்டு, யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் கடந்த 05 வருடங்களாக தனது கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டு வந்த தூய யோசவ் வாஸ் இறையியற் கல்லூரிக்கென புதிய அமைவிடம் "யாழ்ப்பாணம், பிரதான வீதி"யில் அமைந்துள்ள புனித மார்ட்டீனார் குருமட கட்டடத் தொகுதியின் மேல்மாடியில் 11.02.2017 அன்று மேன்மை தங்கிய யாழ். மறைமாவட்ட ஆயரால் தூய்மைப்படுத்தப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இதேநாளில், இக்கல்லூரியின் ஐந்தாவது அணியினராக 2017 இல் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் "புதிய கல்வியாண்டும்" ஆரம்பமானது.

இந்நிகழ்வில் விரிவுரையாளர்கள், மாணவர்கள் மத்தியில் கருத்துரைத்த ஆயர் அவர்கள் பங்குகளில் வாராந்தம் ஞாயிறு திருப்பலியில் வழங்கப்படுகின்ற 10 நிமிட மறை உரை மூலம் பொதுநிலை விசுவாசிகளின் இறையியல் அறிவை ஆழப்படுத்த முடியாது என்றும், எனவே ஒரு சில பொது நிலையினர் இக்கல்லூரியில் இணைந்து பட்டங்களைப் பெற்று, பங்கு மட்டத்தில், மறைக்கோட்ட மட்டத்தில் கருத்தரங்குகள், வகுப்புகள் ஊடாக பகிர்ந்து கொள்வதன் மூலமே தெளிவான இறையியல் விளக்கங்களை வழங்க முடியுமென்றும் குறிப்பிட்டார்.

மேலும் பங்கு மட்டங்களில் பணியாற்றுகின்ற மறையாசிரியர்களை ஊக்குவித்து, அவர்களின் அறிவை ஆழப்படுத்தவும் இக்கல்லூரியைப் பயன்படுத்த வேண்டுமென்று பங்குத்தந்தையர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இயக்குநர் தந்தை எம்.வி.இ. இரவிச்சந்திரன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மறைக் கோட்ட முதல்வர்கள், விரிவுரையாளர்களான பல குருக்கள், பதிவாளர், உதவியாளர்கள், ஏறக்குறைய 80 கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்டார்கள்.

பொதுநிலையினரின் உருவாக்கம் தொடர்பாக தனது தொலைநோக்கு சிந்தனையின் வெளிப்பாடாக காலத்தின் தேவையறிந்து எமது ஆயர் அவர்கள் இச்செயற்பாட்டை மேற்கொண்டுள்ளார் என்பது இங்கு நன்றியுடன் நினைவு கூரப்படுகின்றது.

# திருப்பாலத்துவ சபையில் கௌரவ அங்கத்தவர்களாக அழைப்பு

நீங்களும் திருப்பாலத்துவ சபையின் வளர்ச்சிக்காக முன்னின்று உழைத்த நிரந்தர சின்னம் பெற்ற ஊக்குவிப்பாளரா? அருட்தந்தையாக, அருட் சகோதர சகோதரியாக வாழும் தேவ அழைத்தல் பயணத்திற்கு திருப்பாலத்துவ சபை உமக்கு வித்திட்டதா? அப்படியாயின், உங்களுக்கு எங்களோடு இணைய ஓர் அழைப்பு! விசேட விதமாக இயேசுவின் அன்பை உலகிற்கு எடுத்துரைக்க திருப்பாலத்துவ சபை உறுப்பினர் என்ற ரீதியில் நிரந்த உறுப்பபுரிமை (சின்னம்) பெற்று 2015 ஆம் ஆண்டிற்குமுன் இச்சபையின் வளர்ச்சியில் முன்னின்று உழைத் தவரென் றால், இன்றே உங்கள் முழுப்பெயர், விலாசம், பங்கு மறை மாவட்டம் சின்னம் பெற்ற ஆண்டு,

தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களைக் கீழ்காணும் முகவரிக்கு 2017 பங்குனி 5ம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

இயக்குனர்,
பாப்பிறையின் மறைபரப்புச் சபை
ஆயர் இல்லம், த.பெ.இல. -2
யாழ்ப்பாணம்.

# பேருவளை படகு விபத்திற்கு ஆயர் பேரவை துயர்பகிர்வு

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் களுத்துறை - கட்டுகுருந்தவிலுள்ள கத்தோலிக்க ஆலயத்தில் 19 பெப்ரவரி 2017 ஞாயிறு அன்று வருடாந்த திருவிழாவில் பங்கேற்ற யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்ததில் அதில் பயணம் செய்த 16 பேர் உயிரிழந்தனர். 32 பேர் மீட்கப்பட்டு மருந்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையானது இத்துயர நிகழ்விற்கு தனது ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவித்தது ஓர் இரங்கல் செய்தியை வெளியிட்டுள்ளது.

அதில் தமது உறவுகளை இழந்த குடும்பங்களுக்கு தமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதாகவும், அதே வேளையில் மனித தவறினால் ஏற்பட்ட இந்த கவலைக்குரிய அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தமது ஆன்மீக உடனிருப்பை உறுதிப்படுத்த விரும்புவதாகவும், இந்த கஷ்டமான வேளையில் இறைவன் அருகிலிருந்து அவர்களைத் தேற்ற வேண்டும் என்றும், உயிரை இழந்த அனைவருக்கும் முடிவில்லா அமைதியை இறைவன் கொடுக்க வேண்டுமென்று மன்றாடுவதாகவும் அவ் இரங்கல்செய்திஅமைந்திருந்தது.




12.02.2017 அன்று அகவொளி நிலையத்தில் உள ஆற்றுப்படுத்தல் டிப்ளோமா பட்டம் பெற்ற பட்டதாரி மாணவர்கள் கல்வி நிலைய வேந்தரும் யாழ். ஆயருமாகிய மேதகு யஸ்ரின் ஆண்டகையுடன் படத்தில் காணலாம்.




பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் ஊடாக ஊடகவியல் கற்கை நெறியில் கலைமானிப் பட்டம் பெற்ற பட்டதாரிகள் நிலைய இயக்குநர் தந்தை அருட்பணி ரூபன் மரியாம்பிள்ளை அடிகளுடன் காணலாம்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2017 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.